செயற் பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., நிலநீர் கோட்டம், வேலூர்-6.

முன்னிலை: திரு.வே.மோகன், பி.இ, செயற் பொறியாளர்.,

**செ.மு.எண் நி1 /243/2021/ நாள்:29.06.2021**

பொருள் பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு.எம்.மதன்குமார், த/பெ. காலஞ்சென்ற திரு.பி.முனிசாமி - இளநிலை உதவியாளராக பணி நியமனம் - 12.09.2018 முப முதல் பணிவரன் முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் - சார்பாக.

பார்வை:- 1.முதபொ(நீஆது) மற்றும் த.பொ.(பொது), பொபது சென்னை-5 அவர்களின்செ.மு.ஆ. எண்.3(4)/63098/2011/நாள்.27.07.2018.

2.தலைமைப் பொறியாளர், பொபது, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், சென்னை-113அவர்களின் செ.மு.ஆணை எண்.இ2(4)/615/2020/நாள்.20.04.2021.

3.கண்காணிப்புப் பொறியாளர், நீஆது., நிலநீர் வட்டம், தரமணி சென்னை-119 அவர்களின் செ.மு.ஆணை எண்.நி2/1353/2018/நாள்.22.06.2021.

4.அரசு கடித எண்.17928/பி1/2020-3/நாள் 30.03.2021.

5.தமிழ்நாடு அடிப்படை சிறப்பு விதி 26, பொது விதி 23(a) (ii)

*******

பார்வை1ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணையில், காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.பி.முனுசாமி, உதவியாளர் மகன் திரு.மு.மதன்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவி அளிக்கப்பட்டு இக்கோட்டத்திற்கு பணியமர்வு செய்யப்பட்டது. திரு.மு.மதன்குமார், 12.09.2018 முற்பகல் இக்கோட்டத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

பார்வை 4ல் காணும் அரசு கடிதத்தில், தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 12.09.2018 முற்பகல் முதல் பார்வை 5-ல் காணும் அரசு கடித எண் 17928/பி1/2020-3/நாள் 30.03.2021ன்படியும் அரசாணை (நிலை) எண் 48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யு1) துறை நாள் 26.02.2021 பத்தி 3ல் அரசாணையில் பத்திகள் (5.1) மற்றும் (5.2)ல் 02.02.2016 முதல் 31.122019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து

பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அவ்வாணையினை செயல்படுத்த சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு தொடர்புடைய அரசு பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் மேற்படி இளநிலை உதவியாளருக்கு அவர்தம் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு அடிப்படை விதி 26 மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கான பொது விதி 23(a) (ii) -ன்படி அவர் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 12.09.2018 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

இவர் தனது மூன்றாண்டுகால தொடர் பணியில் இரண்டாண்டுகால தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டுமெனவும், இவருக்கு தகுதிகாண் பருவம் தொடங்கப்பட்டதற்கான ஆணையும் வழங்கப்படுகிறது.

இவர் தகுதிகாண் பருவ காலத்தில் மாவட்ட அலுவலக நடைமுறை மற்றும் கணக்கு தேர்வு பாகம்-1 மற்றும் பாகம் 2ல் தேர்ச்சி பெற வேண்டுமென்ற நிபந்தனையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

V. Hol... 29/6/21

செயற் பொறியாளர், பொ.ப.து.,
நிலநீர் கோட்டம், வேலூர் - 6.

பெறுநர்:

திரு.மு.மதன்குமார்,
இளநிலை உதவியாளர், பொபது.,

29.6.21

(வழி)உதவி இயக்குநர்(நி)
நிலநீர் நிலவியியல் உபகோட்டம்,
வேலூர்-6